1980 ஆகஸ்ட் 1]

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இந்தப் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்படுவது எந்த நிதியில் இருந்து கட்டப்படுகிறது. கேர் நிறுவனம் தரக்கூடிய தொகையில் இருந்து முழுமையாக கட்டப்படுகிறதா? அதில் அரசின் பங்குத் தொகை ஏதாவது இருக்கிறதா? என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, பல நிறுவனங்கள் நிதி அளிக்கின்றன. அது போதவில்லை என்றால் முதல் அமைச்சர் அவர்களின் நிதியிலிருந்தும் எடுக்கப்படுகிறது. பெரும்பாலும் பாதி நிதி நிறுவனங்களில் இருந்தும் பாதி நிதி முதலமைச்சர் நிதியிலிருந்தும் கட்டப்படுகிறது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, புயலடிக்கின்ற நேரங்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பகுதிகளிலும் பாதிப்பு ஏற்படுகிற காரணத்தால், அங்கேயும் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, எங்கெங்கே புயல் அடித்து அதனால் சேதம் விளைகின்ற நிலைமை ஏற்படுகிறதோ அங்கெல்லாம் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுத்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ஒரு ஊரில் 10,000 மக்கள் புயல் ஏற்படுகின்ற நேரத்தில் பாதிப்புக்குள்ளாவதால் அத்தனை மக்களும் அந்த இல்லங்களில் சென்று தங்க வசதி உள்ளதா? அதற்கான வசதிகளை அரசு செய்து தருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, புயல் பாதுகாப்பு இல்லங்கள் இப்போது 'ரவுண்டாக' 'சர்க்குலராக' கட்டப்படுகிறது. அதற்கு 4 புறமும் வாயிற்படி அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்த இல்லத்தின் கீழ்பகுதியில் 500 மக்களும், மேலே 500 மக்களும் தங்க முடியும் என்கிற அளவிற்கு இப்போது கட்டப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசினர் மருத்துவமனை, உதகமண்டலம்.

* குறுகிய கால வினா எண். 56—திரு.கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் அரசினர் மருத்துவமனையில் போதுமான அளவில் டாக்டர்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

(இ) இக்குறையை நீக்க உடனடியாக ஆவன செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) போதுமான டாக்டர்கள் அவ்வப்பொழுது பணியில் சேர ஆணை பிறப்பிக்கப்பட்டு வருகிறது. ஆயினும் குளிர் பிரதேசமான உதகமண்டலத்தில் பெரும்பாலோர் பணியில் சேராமல் ஏதாவது ஒரு மருத்துவ காரணங்காட்டி வேறு இடங்களுக்கு மாறுதல் நியமனம் பெற்று சென்று விடுகின்றனர்.

(இ) ஆம். தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், உதகமண்டலத்தில் உள்ள மருத்துவ மனைதான், மூன்று தாலுக்காக்களுக்கும் சேர்த்து அமைக்கப் பட்டுள்ள மருத்துவமனையாக இருப்பதால், அந்த மருத்துவ மனைக்கு அதிகமான டாக்டர்கள் தேவை. இப்போது கிட்டத் தட்ட 34 டாக்டர்கள் இருக்க வேண்டிய அந்த மருத்துவமனை யில் கிட்டத்தட்ட பாதி பேருக்கு மேல் உள்ள பதவிகள் காலியாக உள்ளன என்று தெரிகிறது. ஆகவே, அந்த மருத்துவ மனைக்கு டாக்டர்களை நியமிக்கின்ற நேரத்தில், கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களையோ அல்லது நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த வர்களையோ அங்கே நியமிப்பதன் மூலம் இந்தக் குறையைத் தவிர்க்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இப்போது உதகை மருத்துவ மனையில் உள்ள 37 அசிஸ் டென்ட் சர்ஜன் பதவிகளில் 29 பேர் பணியாற்றுகின்றனர், 8 இடங்கள் காலியாக உள்ளன. அது குளிர் பிரதேசமாக இருப்ப தால், எப்படியோ ஆங்காங்கு இருப்பவர்கள் அங்கே போவதற்கு போடும் ஆணைகளைத் தவிர்த்து விடுகின்றனர். இப்போது அந்த நிலைமை இல்லை. முன்பு எப்படியோ யார் யார்இன்ப்ளு யன்சை வைத்துக்கொண்டு செய்து கொண்டிருந்தார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்க்க இப்போது திட்ட வட்டமாக ஒரு உத்தரவு போட்டு, அந்த ஆஸ்பிடலில் தற் போது 29 பதவிகள் நிரப்பப்பட்டு இருக்கின்றன. மீதமுள்ள இடங்களும் விரைவில் நிரப்பப்படும். எந்த இடமும் காலி யாக இல்லாத வகையில் இருப்பதற்கான முறையில் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள முயற்சிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊட்டி மருத்துவமனை சம்பந்தப்பட்டமட்டில், இந்தப் பிரச்னை இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. தொடர்ந்து பல ஆண்டுகாலமாக அங்கே டாக்டர்கள் இருப்பது இல்லை என்று புகார் இருந்து வருகிறது. கிட்டத்தட்ட 10 ஆண்டுகாலமாக இதைச் சொல்லிக்கொண்டு வருகிறோம். அது குளிர் பிரதேசமாக இருப்பதால் அங்கே செல்வதற்கு டாக்டர்கள் விரும்புவது இல்லை. ஆகவே, இந்த நிலையைத் தவிர்க்க அதிகமாக ஹில் அலவன்ஸ் கொடுக்க அரசு முயற்சிக்குமா? அமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள்? எல்லா டாக்டர்களும் குறைந்தபட்சம் ஒரு ஆண்டுக்காவது அங்கே பணியாற்றவேண்டும் என்று உத்தரவு போடப்படுமா? அத்தகைய உத்தேசம் அரசுக்கு உண்டா? எந்த முறையில் கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்துள்ளது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்ன மாதிரி ஒவ்வொருவரும் ஓராண்டுகாலம் அந்த இடத்தில் பணியாற்றவேண்டும் என்று திட்டவட்டமாக உத்தரவு போடுவதில் எந்தவிதமான சிரமமும் இல்லை. முன்பு எல்லாம் கம்பல்சரியாக ஒருவர் 2-3 ஆண்டுகள் ஒரு இடத்தில் பணியாற்றவேண்டும் என்று இருந்தது. அத்தகைய கடுமையான உத்தரவு போடுவதன் மூலம் ஓரளவிற்கு இதில் வெற்றி பெறலாம். நிச்சயமாக வெற்றி பெறமுடியும். அது மட்டுமல்ல, இப்போது தற்காலிகமாக டாக்டர்களை நியமிக்க இருக்கிறோம். அவர்களை அங்கே போடுவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் அதை சௌகர்யமாக நிறைவேற்ற முடியும் என்று கருதுகிறேன்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்கிறபோது அது குளிர் பிரதேசமாக இருப்பதால் அங்கே மருத்துவர்கள் வரத் தயங்குகிறார்கள் என்று சொன்னார்கள். நான் முன்பு கேள்விகேட்டபோதே கேட்டேன், நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த டாக்டர் பயிற்சி பெற்றுள்ளவர்கள் வேறு இடங்களில் பணிபுரிகிறார்கள். அவர்களை அங்கே நியமிப்பதன் மூலம் இதை தவிர்க்கலாம். ஆகவே, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா?

[முற்பகல் 10-00]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, அந்த ஏற்பாட்டையும்கூட ஏற்கனவே பரிசீலனை செய்து வருகிறோம். இதற்கு முன்னால் பதில் சொல்லும்போது கூட 'ட்ரான்ஸ்ஃபர் வித்தவுட் டி. ஏ.' என்று சொன்னேன். அந்த இடத்தில் இருக்கிறவர்களைப் பார்த்து அங்கே போடுவது சௌகரியமாக இருக்கும். என்றாலும் அதே ஊரைச் சேர்ந்தவர்

களைப் போட்டால், அவர்கள் அரசாங்கப் பணியில் கவனம் செலுத்தாமல் பிரைவேட் பிராக்டிசில் கவனம் செலுத்தும் நிலை ஏற்படக்கூடும். ஆகவே, ரொம்பவும் அப்படிச் செய்யாமல், அவர்கள் அரசாங்கப் பணியில் அதிகக் கவனம் செலுத்தும் வகையில் அந்த ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் கேள்வி நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, அங்கே டாக்டர் களும் அதிகமாக இல்லை; பெட்களும் போதுமான அளவுக்கு இல்லை. பெட் இல்லாமல் நோயாளிகள் அந்தக் குளிரில் கீழே படுத்து கஷ்டப்படுகிறார்கள்; அவர்களுக்கு கம்பளிகள் கூட தருவதில்லை. இந்தத் தகவல்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அமைச்சரே அந்த மருத்துவ மனையை ஒரு முறை நேரில் பார்க்கும் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மருத்துவ மனையில் இருக்கிற டாக்டர்கள் பற்றியது கேள்வி. உங்களுடைய கேள்வி கம்பளி வரை போகிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அந்த மருத்துவமனையை ஏற்கனவே ஒருமுறை நான் பார்த்திருக்கிறேன். எஸ்டிமேட்ஸ் கமிட்டி, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் போகும்போதும் பார்த்திருக்கிறேன். ஒரு முறை யாருக்கும் சொல்லாமல்கூட போய் பார்த்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுமாதிரி இன்னும் நல்லமுறையில் பார்க்க வாய்ப்பு இருக்கிறது. அந்தவகையில் எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்போது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும், கடுமையான உத்தரவு போடப்படும் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நடவடிக்கைகள் மூலம், தண்டனை அளிக்கும் உத்தரவுகள் மூலம் அங்கே டாக்டர்களை உட்கார வைத்துவிட முடியாது. அது ஒரு மாவட்ட தலைமையிடம். அங்கே சிறந்த ஆஸ்பத்திரி இருக்க வேண்டும். அப்படியானால் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து தண்டனை அளிப்பதற்கு பதிலாக அவர்களுக்கு கூடுதல் சலுகைகள் அளித்து, சம்பளத்தை டபிள் ஆக்கி இதர அலவன்சும் அதிகப்படுத்தப்பட்டு, அவர்கள் குடியிருக்க வீட்டு வசதியையும் செய்து கொடுத்தால் எந்த டாக்டரும் ஊட்டியில் இருக்க மறுக்க மாட்டார்கள் ஆகவே, அப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, கடுமையான நடவடிக்கைகள், கடுமையான உத்தரவுகள் என்று நான் குறிப்பிட்டது தண்டனை வழங்க அல்ல. அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. சில திட்டவட்டமான நடவடிக்கை என்று அர்த்தம். அந்த நடவடிக்கையில் இன்னும் ஜாஸ்தியாக அலவன்ஸ் கொடுக்கலாமா வேறு சலுகைகளை ஜாஸ்தியாக கொடுக்கலாமா என்று ஆராய்ந்து முடிவு செய்வது கூட அடங்கும்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, ஊட்டியைப் பொறுத்தவரையில் சில உத்தரவுகளைப் போடுவதற்கு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஊட்டியைப் போன்றிருக்கிற கொடைக்கானலிலும் அதேமாதிரியான உதத்ரவுகள் போடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இது ஒரு பொதுவான பிரச்சனை. இந்த பொதுவானப் பிரச்சனையைப் பொறுத்தவரையில், இதைச் சமாளிக்க இப்போது

Temporary appointments to the posts of Assistant Surgeons in the Tamil Nadu Medical Service are being made now. This temporary appontment is done from among the medical graduates registered with the Director of Medical Services and Family welfare in the order of seniority. So far, 100 women candidates and 83 men candidates have been appointed. At present a list of 68? candidates (women) for temporary appointment is under consideration.

இவைகள் எல்லாம் பொதுவாகக் கேட்டக் கேள்விக்கு அளிக்கப்படும் பொதுவான பதில். இப்படி தற்காலிகமாக எடுத்துக் கொள்ளும் டாக்டர்களின் எண்ணிக்கையை ஜாஸ்தியாக்க இருக்கிறோம். அந்த நடவடிக்கை மூலம் எங்கெங்கே பற்றாக்குறை இருக்கிறதோ, காலி இருக்கிறதோ அங்கெல்லாம் இந்த 'காடர்' அமைக்கப்பட சௌகரியமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

பரீட்சைக்குப் பணம் கட்டும் தேதியை நீட்டித்தல்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு முக்கியமான பிரச்சனையைக் கொண்டுவருகிறேன். எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி. பரீட்சைகளில் தேறாதவர்கள் அக்டோபர் மாதம் நடைபெறும்